தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22-8-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம்

பார்த்தீனியம் ஒரு நச்சுக் களை. இக்களைச் செடியானது, உலகம் முழுவதுமாக பரவி பலவிதமான தீங்கினை மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் மற்றும் வேளாண்மை சாகுபடிக்கும் ஏற்படுத்துகின்றது. ஏனவே, மத்திய அரசானது ஆகஸ்ட் 16 முதல் 22, 2016 வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரமாக அறிவித்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆகஸ்ட் 16 முதல் 22-ந் தேதி வரை பார்த்தீனியம் விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

பார்த்தீனியத்தைப் பற்றியும் அதன் நச்சுத் தன்மைகளைப் பற்றியும் வேளாண் மாணவர்கள், உழவர் பெருமக்கள், பண்ணைப் பணியாளர்கள், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் பொது மக்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்த கருதி வேளாண் பல்கழைக் கழகத்தின் உழவியல் துறை சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் ஏறக்குறைய 300 முதல் 400 பேர் பங்கேற்றனர். இதில் கட்டுரை போட்டி, வினாடி வினா நிகழ்ச்சி, செயல் விளக்கத் திட்டம் மற்றும் பார்தீனிய விழிப்புணர்ச்சி கூட்டம் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளின் மூலம் ஏறக்குறைய 600 பேருக்கு பார்த்தீனியத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பார்த்தீனிய விழிப்புணர்வு வாரத்தின் முதற்கட்டமாக, ஆகஸ்ட் 16, 2016 அன்று கட்டுரை போட்டியும், ஆகஸ்ட் 17, 2016 அன்று வினாடி வினா போட்டுகளும் இளங்கலை வேளாண் அறிவியல் மாணவர்களிடையே நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் 20, 2016 அன்று பல்கலைக்கழக வளாகத்தில் களை மேலாண்மை பிரிவு, உழவியல் துறை ஏற்பாடு செய்திருந்த செயல் விளக்கத் திட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் கு.ரா.அனந்தகுமார் அவர்கள், பயிர் மேலாண்மைத் துறை இயக்குனர் முனைவர் சி ஜெயந்தி அவர்கள், முனைவர் மு.ஜவஹர்லால், முதல்வர் தோட்டக்கலை மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர் (உழவியல் துறை) முனைவர் ப. தேவசேனாதிபதி மற்றும் ஆசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டனர். இச்செயல் விளக்கத்தில், பார்த்தீனியத்தின் தீமைகள் மற்றும் மனிதர்களுக்கு அதனால் ஏற்படும் தீங்குகள் பற்றிய விவரங்கள் தெரியப்படுத்ததப்பட்டது. இதன் பிறகு, பார்த்தீனியம் பற்றிய காட்சி சுவரொட்டிகள், களைக்கொல்லிகள் மற்றும் கைத்தெளிப்பான்கள் போன்றவற்றுடன் செயல்விளக்கம் மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் கு.ரா.அனந்தகுமார், அவர்கள் களைச்செடிகளின் சிறப்பியல்புகளையும் அதன் சுற்றுசூழல் தாக்கம் மற்றும் பார்த்தீனியத்தை உரமாக பயன்படுத்துவது ஆகியவற்றையும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் மேலாண்மைத் துறை இயக்குனர் முனைவர் சி. ஜெயந்தி அவர்கள் தனது சிறப்புரையில் பார்த்தீனிய செடியின் விதை உற்பத்தி திறனும் அதனை சுழற்சி முறையில் கட்டுபடுத்தும் முறைகளையும் எடுத்துரைத்தார்.

முனைவர். சி. சின்னுசாமி, பேராசிரியர் (உழவியல்) அவர்கள் பார்த்தீனியத்தின் முக்கியதுவத்தையும் அதன் தீங்கினையும் எடுத்துரைத்து அதன் பலவகை மேலாண்மை முறைகளை சுட்டிக்காட்டி பேசினார்.

இறுதியாக, கட்டுரை மற்றும் வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கப்பட்டது.

முன்னதாக, முனைவர் ப. தேவசேனாதிபதி பேராசிரியர் மற்றும் தலைவர் (உழவியல் துறை) அனைவரையும் வரவேற்றார். முனைவர்.ப.முரளி அர்த்தனாரி, உதவி பேராசிரியர் (உழவியல்) நன்றியுரை ஆற்றி மாணவர்களுக்கு பார்த்தீனிய பற்றிய காட்சி சுவரொட்டிகளை காண்பித்து அதனைப்பற்றிய விளக்கங்களை எடுத்துரைத்தார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்